**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.21/2020 -PW-1**

| | |
|---|---|
| Name | திரு.ஆர்.சுந்தரமூர்த்தி |
| Father Name | திரு.ராகவன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **09.02.2026.**

**2-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. 2-ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜர் இல்லை. எனவே 2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என பதிவு செய்யப்படுகிறது.**

**5-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் வானாபாடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மும்பையில் 40 வருடங்களாக கட்டிட வேலை கொத்தனாராக வேலை செய்து வந்தேன். 10 வருடங்களுக்கு முன்பு நான் இராணிப்பேட்டைக்கு வந்துவிட்டேன். என் மகன் ஈஸ்வரன் கடந்த 9 வருடங்களாக எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நான் கிரையம் வாங்கிய பிறகு அதில் என் மகனுக்கு ஜவுளிக்கடை வைத்துக் கொடுத்தேன். ஜவுளிக்கடை நடத்துவதற்காக என் மகன் கடன் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் உள்ள கட்டிடத்தில் முதல் மாடியை இரண்டு நபர்களுக்கு நான் வாடகைக்கு விட்டிருந்தேன். முதல் மாடியில் குடியிருந்தவர்கள் எப்போது காலி செய்தார்கள் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு சொத்து வரி, மின்சார கட்டணம் ஆகியவற்றை நான் தான் செலுத்தி வந்தேன். நான் சொத்துவரி செலுத்தியதற்கான ஆவணங்களை 4-ம் பிரதிவாதி வங்கி எடுத்து சென்றுவிட்டனர். நான் எந்த ஆண்டு வரை சொத்துவரி செலுத்தி வந்தேன் என்பதை தற்போது என்னால் சொல்ல முடியாது. என்னுடைய உடைமைகளை வழக்கு சொத்தில் இருந்த பீரோவில் வைத்திருந்தேன். 4-ம் பிரதிவாதி வங்கி வழக்கு சொத்தை ஏலம் விடும் வரை அந்த சொத்து என்னுடைய அனுபவத்தில் இருந்தது. 4-ம் பிரதிவாதி வங்கி வழக்கு சொத்தை ஏலம் விடுவதற்கு முன்பு வரை நான் தினமும் வழக்கு சொத்திற்கு சென்று வருவேன். 4-ம் பிரதிவாதி வங்கியிலிருந்து என் மகனுக்கு அறிவிப்பு பல முறை அனுப்பப்பட்டதா என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கான அசல் கிரையப்பத்திரம் என்னிடம் உள்ளது. அசல் பத்திரம் என்னிடம் இருக்கும் போது என் மகன் 1-ம் பிரதிவாதி எப்படி 4-ம் பிரதிவாதி வங்கியிடம் கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. கடையை 4-ம் பிரதிவாதி வங்கி காலி செய்த போது தான் என் மகன் வங்கியில்

கடன் வாங்கியிருந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. 1-ம் பிரதிவாதி வங்கியில் போலி ஆவணம் மூலம் கடன் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. நான் என் மகன் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. என் மகன் வாங்கிய கடனுக்காக தான் 4-ம் பிரதிவாதி வங்கி வழக்கு சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள் என்றால் சரிதான். 2014-ம் ஆண்டிலிருந்து வழக்கு சொத்திற்கான சொத்து வரி என் மகன் பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான பட்டா என் மகன் பெயருக்கு மாறிவிட்டது என்றால் எப்படி மாறியது என்று எனக்கு தெரியாது. நானும், என் மகனும் கூட்டுக் குடும்பமாக இருந்து வந்தோம் என்றால் சரிதான். நான் தான் என் மகனுக்கு வழக்கு சொத்தை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதி வங்கியில் கடன் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மகன் வழக்கு சொத்தை வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்ற விவரம் 2014-ம் ஆண்டே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. உண்மையிலேயே என் மகன் போலி ஆவணம் தயார் செய்து வங்கியில் கடன் பெற்றிருந்தால் நான் அப்போதே என் மகன் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு எதுவும் இல்லை என்பதால் தான் நான் என் மகன் மீது அப்போது நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. தற்போது என் மகன் எங்குள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியது. என் மகன் தற்போது என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றாலும், வங்கியில் பெற்ற கடனை ஏமாற்றுவதற்காக நானும், என் மகனும் சேர்ந்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. 2014-ம் ஆண்டு ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் அடமானத்தை பொறுத்து காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கடன் தீர்ப்பாய உத்தரவின் படி ஏலமிடப்பட்டுள்ளதால் வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட என்னுடைய கோரிக்கை மனுவை கடன் தீர்ப்பாயத்தில் தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும், இந்த நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றாலும், என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை

BALAKRISHNAN
Digitally signed by BALAKRISHNAN
Date: 2026.02.09 16:58:53 -0500

I Additional District Judge,
Ranipet.